சுருக்கம்

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று (கோவிட் 19) – அரசு மேற்கொண்டு வரும் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்காக, அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒரு நாள் ஊதியத்தினை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்க பல்வேறு பணியாளர் சங்கங்களால் விருப்பம் தெரிவிக்கப்பட்டது – ஏற்றுக் கொள்ளப்பட்டது – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை**

**அரசாணை(நிலை) எண். 52**

**நாள்: 27.05.2021**
**பிலவ வருடம், வைகாசி – 13**
**திருவள்ளுவர் ஆண்டு –2052**

**ஆணை :**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று (கோவிட் 19) பரவலின் இரண்டாவது அலையை கட்டுப்படுத்துவதற்கும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண பணிகளை மேற்கொள்வதற்கும், போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது 11.05.2021 நாளிட்ட செய்தி வெளியீட்டில், இந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கு அரசு கூடுதலான நிதி ஆதாரங்களைச் செலவிட வேண்டிய தேவை உள்ளது என்றும், அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களால் இயன்ற வகையில் உதவி செய்ய வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும் என மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

2. அதனைத் தொடர்ந்து, பல்வேறு அரசுப் பணியாளர் சங்கங்கள் அளித்த கடிதங்களில், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றிலிருந்து தமிழக மக்களை பாதுகாக்க எடுக்கப்படும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒரு நாள் ஊதியத்தினை தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

3. அரசுப் பணியாளர் சங்கங்களின் மேற்குறிப்பிட்ட விருப்பத்தினை தீவிர பரிசீலனை செய்து, அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவல் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்காக, அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒரு நாள் ஊதியம் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கான ஊதியத்தினை அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில், பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி, மே அல்லது ஜூன், 2021–ஆம் மாதத்திற்கான ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்க அனுமதித்து அரசு ஆணையிடுகிறது : –

i. முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தங்களது ஒருநாள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கான ஊதியத்தினை வழங்க விரும்பும் அலுவலர்கள் / பணியாளர்கள் / ஆசிரியர்கள், அதற்கான தங்களது

(த.பி.பா)

விருப்பத்தினை சம்பந்தப்பட்ட ஊதியம் பெற்று வழங்கும் அலுவலருக்கு *(Drawing and Disbursing Officer)* எழுத்து பூர்வமாக அளிக்க வேண்டும்.

ii. பிடித்தம் மேற்கொள்ளப்படும் மாதத்திற்குரிய (மே அல்லது ஜூன், 2021) நிகர ஊதியத்தினை (Gross Salary) அடிப்படையாகக் கொண்டு பணியாளர்களின் ஒரு நாள் ஊதியம் கணக்கிடப்பட வேண்டும். அதன்பொருட்டு, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை முறையில் (IFHRMS) உள்ள வழிமுறைகளை பயன்படுத்தி, பணியாளர்களின் ஒருநாள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கான ஊதியத்தினை ஊதியம் பெற்று வழங்கும் அலுவலர்கள் கணக்கிடலாம்.

iii. பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை, **'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'**–க்கான பின்வரும் வங்கி சேமிப்பு கணக்கில் மின்னணு முறை (Electronic Clearing System) மூலமாக ஊதிய நாளான்று நேரடியாக செலுத்தப்பட வேண்டும்:–

| | | |
|---|---|---|
| வங்கி பெயர் | – | **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி** |
| கிளை | – | **தலைமைச் செயலகம், சென்னை– 600 009** |
| **சேமிப்புக் கணக்கு எண்** | – | **117201000000070** |
| **IFS Code** | – | **IOBA0001172** |
| **MICR Code** | – | **600020061** |
| **CMPRF PAN** | – | **AAAGC0038F** |

iv. பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு செலுத்தப்பட்ட தொகை, பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான துறை அலுவலர் மற்றும் துறைத் தலைவருக்கு ஊதியம் பெற்று வழங்கும் அலுவலர்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

v. மின்னணு முறை மூலமாக ஊதியம் வழங்கும் நடைமுறை இல்லாத அலுவலகங்களை பொருத்தவரையில், பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட மொத்த தொகையினையும் **'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'** (Chief Minister's Public Relief Fund) என்ற பெயரிலான குறுக்குக் கோடிட்ட காசோலை (Crossed Cheque) அல்லது வங்கி வரைவோலை (Demand Draft) மூலமாக செலுத்தப்பட வேண்டும். அத்தகைய காசோலை அல்லது வங்கி வரைவோலையுடன், அலுவலகத்தின் பெயர், பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விவரங்களை கொண்ட பட்டியலையும் இணைத்து மாவட்ட அளவிலான துறை அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட காசோலை / வங்கி வரைவோலை மற்றும் இதர விவரங்களை கீழ்காணும் முகவரிக்கு மாவட்ட அளவிலான துறை அலுவலர்கள் அனுப்பி வைக்க வேண்டும்:–

அரசு இணைச்செயலாளர் மற்றும் பொருளாளர்,
முதலமைச்சர் பொது நிவாரண நிதி,
நிதித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

அதன் விவரம், சம்பந்தப்பட்ட துறைத்தலைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். இதன்பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அலுவலரை

துறைக்கான பற்றாளராக (Nodal Officer) நியமனம் செய்து சம்பந்தப்பட்ட துறைத்தலைவர் ஆணையிடலாம்.

vi. தாமாக ஊதியம் பெற்றுக் கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் (Self Drawing Officers) மேற்காணும் நடைமுறைகளை பின்பற்றி தங்களது பங்களிப்பினை செலுத்தலாம்.

vii. பணியாளரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு செலுத்தப்பட்ட தொகை முழுவதற்கும் (100 விழுக்காடு) வருமான வரிச்சட்டப் பிரிவு 80(G)ன் கீழ் வரிவிலக்கு பெற அனுமதி வழங்கப்படுகிறது.

viii. ஒன்றுக்கும் மேற்பட்ட நாட்களுக்கான ஊதியத்தினை வழங்க விரும்பும் அலுவலர்கள் / பணியாளர்கள் / ஆசிரியர்கள், மேலே பத்தி 3 (i)-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறையினை பின்பற்றி தங்களது விருப்பத்தினை அளிக்கலாம்.

ix. உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசிடமிருந்து மானியம் பெறும் நிறுவனங்களின் பணியாளர்களுக்கும் மற்றும் தொகுப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கும் இவ்வாணைகள் பொருந்தும்.

x. முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, தங்களது ஒருநாள் ஊதியத்தினை வழங்க பணியாளர் சங்கங்கள் தெரிவித்துள்ள விருப்பத்தினை செயல்படுத்தும் விதமாகவே மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் வெளியிடப்படுகின்றன. இந்நிலையில், அரசு அலுவலர்கள் / பணியாளர்கள் / ஆசிரியர்களின் சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே ஒரு நாள் ஊதியம் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நாட்களுக்கான ஊதியம் பிடித்தம் செய்யப்படுகிறது என்பதை சம்பந்தப்பட்ட ஊதியம் பெற்று வழங்கும் அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.22182/இ.செ.(பா.அ.ப)/மு.பொ.நி.நி/2021, நாள் 19.05.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. இறையன்பு
அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / அரசு முதன்மைச் செயலாளர்கள் /
அரசு செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 600 009.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை – 600 009.
அனைத்து துறைத்தலைவர்கள், (தலைமைச் செயலக துறை வழியாக).
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை / மதுரை கிளை.
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 003.
அனைத்து உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு பொது நிறுவனங்கள்,
ஆணையர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை – 600 035.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

சம்பள கணக்கு அலுவலகம், சென்னை – 1/5/8/9/35/79.
சம்பள கணக்கு அலுவலகம், மதுரை – 625 001.
மாநில கணக்காயர், சென்னை– 18/35.
உள்ளுறைத் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
தேசிய தகவல் மையம் , சென்னை – 600 009 (மேற்படி அரசாணையை தமிழக அரசு வலைத்தளம் http://www.tn.gov.in-ல் வெளியிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

நகல்

முதலமைச்சரின் செயலாளர் –III, முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை– 600 022.
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை– 9.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை – 600 009.
நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த துறை முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (நி.சீ.2) துறை, சென்னை – 600 009.
நிதி (மு.அ.பொ.நி.நி / பொ.நி.மாக) துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஜெ. அனந்தராமகிருஷ்ணன் 27
பிரிவு அலுவலர்.

தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6.
ந.க.எண். 06124 / அ1 / 2021, நாள். 31.05.2021.

கொரோனா வைரஸ் நோய் தொற்று (கோவிட் –19) சார்பாக அரசு மேற்கொண்டு வரும் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்காக அரசு அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது ஒரு நாள் ஊதியத் தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்க அனுமதித்து வழங்கப்பட்டுள்ள அரசாணையின் நகல் உரிய நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் பணிபுரியும் அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து பார்வையில் கண்ட அரசாணை வாயிலாக பெறப்படும் முதலமைச்சரின் நிவாரண நிதி விவரங்களை ஒன்றியவாரியாக தொகுத்து மாவட்ட அளவில் விவரங்களை அனுப்புவதற்கு மாவட்ட பற்றாளராக (Nodal Officer) முதன்மைக் கல்வி அலுவலர்கள் செயல்பட தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அரசாணையில் கண்டுள்ள அறிவுரைகளை தவறாது பின்பற்றி தொடக்கக் கல்வி இயக்ககம் சார்பாக பெறப்படும் முதலமைச்சரின் நிவாரண நிதிக்கான விவரங்களை (பெயர், பதவி, பணிபுரியும் பள்ளி / அலுவலகம் மற்றும் தொகை) ஒன்றியவாரியாக மாவட்ட அளவில் தொகுத்து அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

31/5/21
தொடக்கக் கல்வி இயக்குநர்

31/5 31/5

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்
} தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது